
# சந்துருவுக்கென்றே ஒரு வானம்

□

இந்திரன்



ஓவியர் சந்துருவை ஒரு பூர்வமான பறவை என்று ன் எப்போதும் குறிப்பிடுவ ண்டு. அந்தபறவைக்கு என்று னித்துவமான சிறகுகள்; ந்த சிறகு நுனியில் தோன் ம் பாதை தனித்துவமானது; தற்கென்று தனியான ஒரு காயம். ஆனால் அதற்கான ணவை அந்த பறவை கீழே ருக்கும் மண்ணிலிருந்துதான் பறுகிறது என்பதை நாம் ந்துவிடக் கூடாது.

'அறியப்படாத ஓவியன்' ன்ற சித்திரம் ஒன்றில் தலை ற்ற ஒரு உடல் கால்களை டி அமர்ந்து அதன் தொடை யிலிருந்து முளைத்த இரு களினால் நாதஸ்வரம் சைக்கிறது. நாதஸ்வரத்தை தும் உதடுகளோ, முகமோ ரையப்படவில்லை.

தான் வரைந்த இந்த சித்திரத் தக் காண்பித்து சந்துரு ஒரு றை சொன்னார்: "இந்த றியப்படாத ஓவியன் நான் ன். எனது தலையை இதில் ண முடியாது. ஏனெனில் ன் இன்னமும் அறியப்படாத னாகவே இருக்கிறேன். னால் நேரிடையாக எனது தயத்தில் இருந்து எனது லையை நான் இசைக் றன்."

ந்துருவின் - ஜி. சந்திர கரன்—படைப்புகள் அதீத னவை. அவரின் உருவங் தலையற்று, இவை கால் ா, கைகளா என்று நிதா க முடியாதபடி, ஆணா, ண்ணா என்று முடிவு செய்ய யாதவைகளாக காணப்படு றன. மேல்நாட்டு கலை டு தொடர்புடையவர்கள் ற்றை 'சர்ரியலிச பாணி' யங்கள் என்று உடனடி ச் சொல்லிவிடுவார்கள். னால் இந்த படைப்புகளின் த்தில் இந்த தமிழ் மண் கே உரித்தான ஒரு அழ ் புரிதல் இருப்பதை கவ கத் தவறிவிடுவோமானால் ருவை நாம் இன்னமும் 'அறியப்படாத ஓவியனா'கவே வைத்தவர்கள் ஆவோம்.

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள பழங்கால மரபுரீதியான ஓவியங்களையும், சிற்பங்களை யும் நன்கு புரிந்து கொண்ட மிகச்சிலரில் ஒருவர் சந்துரு.

சென்னை ஓவியக் கல்லூரி யில் தனது படிப்பை முடித்த பிறகு, சந்துரு தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்தில் சிறிது காலம் பணி புரிந்திருக்கிறார். இந்த காலகட்டத்தில் பல ஆயி ரம் ஆண்டுகளுக்கு முந்திய தனது சககலைஞர்களின் அடிச் சுவடுகள் ஒவ்வொன்றையும் அவர் ஆராய்ந்து பார்த்திருக் கிறார்.

அஜந்தா, தஞ்சாவூர், சித் தன்னவாசல், காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள சுவரோவியங் கள் இவரை அதிகமாக பாதித் திருக்கின்றன. ராஜஸ்தானில் பனஸ்தலிவித்யா பீடத்தில் சுவ ரோவியம் பயின்றவராதலினால் இவர் தனக்கான பாணியை பழைமையின் கனமான அஸ்தி வாரத்தின் மீது எழுப்பியிருக் கிறார்.


இன்று சென்னை ஓவியக் கல்லூரியில் ஆசிரியராக பணி புரியும் இவரது தமிழ்க்கலை பற்றிய மிக நல்ல புரிதல், மேல் நாட்டுக் கலையைக் கண் மூடித்தனமாகப் பின்பற்றி வான் கோழித்தனமான ஒரு கலையை உருவாக்குவதிலிருந்து இவரைக் காப்பாற்றுகிறது.

ஓவியத்துக்குள் ஒரு அசைவை, ஒரு இயக்கத்தை வெளிப்படுத்துவது பற்றி சந் துருவுடன் பேசிக்கொண்டிருந்த போது நமது மரபு ரீதியான கலை பற்றிய அவரது புரிதல் என்னை மகிழ்ச்சியடைய வைத்தது.

ஓவியத்துக்குள் ஒரு அசைவை - ஒரு இயக்கத்தை வெளிப்படுத்த மார்ஷல் டன் ஷம்ப் தனது 'படியிறங்கும் நிர் வாண நங்கை' எனும் ஓவியத் தில் பெண்ணின் கைகளையும், கால்களையும் அடுத்து அடுத்து கித்தானில் பதிவு செய்து காண் பித்திருக்கிறார்.

சிந்துவெளி நாகரிக காலத்து கலையில் ஆடு ஒன்றை இவ் விதமாக சித்தரித்திருக்கிறார் கள். இதனை சந்துரு ஒரு நொடியில் படமாக வரைந்து காண்பித்தார். ஆடு ஒன்று தலையாட்டுகிறது. இதைக் காட்ட அந்த ஆட்டின் உடம் பில் குனிந்த நிலையில் ஒரு தலை. சற்று நிமிர்ந்த நிலையில் ஒருதலை. நன்கு நிமிர்ந்த நிலையில் ஒரு தலை. இவ்வித மாக அசைவைக் காண்பித் திருக்கிறார்கள்.

இதையே மேலும் நுன்மை யான முறையில் வெளிப்படுத்தி இருக்கிறார்கள் பழங்கலைஞர் கள். துர்கை, அரக்கனை நோக்கி வாளைச் சுழற்றும் வேகத்தைக் காட்ட அவளது இடைக்குமேல் இருக்கும் உடம் பின் பகுதி எதிர்த்திசையில் திரும்பி இருப்பது போல் அமைத்து இருக்கிறார்கள். இப் படி திரும்பிய இடை, மீண்டும் மிகவேகமாக முன்னால் வந்தே தீரவேண்டும். வாளைச்]சுழற் றும் விசையை சித்தன்ன வாசல் ஓவியம் காட்டுகிறது. இதனைச் சில வினாடிகளில்



சித்திரமாக வரைந்து காண்பித்த போது, சந்துருவுக்குள் இந்த ஓவியங்கள் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பதை அறிய முடிந் தது.

இந்திய ஓவியங்களில் பறப் பது என்று குறிப்பிட்டால், பறப்பது போன்ற பாவனை இருக்கும். சிறகுகள் இல்லாம லேயே பறப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தி விடுவார் கள். சித்தன்ன வாசல் ஓவியங் களில் ஒரு பெண் ஒரு பூவைச் சுட்டிக் காட்டுகிறாள் என்றால் சுட்டிக்காட்டும் விதத்தினா லேயே அவள் சுட்டிக்காட்டு வது ஒரு மலர்தான் என்று உணர்த்தி விடுவார்கள்.

இந்த புரிதல்தான் சந்துரு வின் படைப்புகளின் அடி நாதம். சந்துரு உடம்பின் மொழியைப் புரிந்து கொண்ட வர். கோடுகளின் குரலை அறிந் திருப்பவர். இதனாலேயே இவ ரது பல ஓவியங்கள் கோடு களைச் சார்ந்து இயங்குபவை.

இவர் தைல வண்ணத்தை அதிகம் பயன்படுத்துவதில்லை. காரணம் வண்ணத்தின் ஈரம் உலரும் வரை தன்னால் காத் திருக்க முடிவதில்லை என்கிறார் இவர். அக்ரிலிக் வண்ணம் தான் இவர் வேகத்திற்கு ஈடு கொடுக்கிறது.

சந்துரு இன்றைய தமிழக ஓவியர்களில் மிகச் சிறந்த சித் திரக்காரர். மிகச் சிறந்த சோத னைக்காரர். ஓவிய மரபுகளை உள்வாங்கி செரித்துக் கொண் டவர்.

தமிழ் உலகம் இந்த உண் மைக் கலைஞரைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு வளர வேண்டும்.

